சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து பாரதி குறித்த நிகழ்வுகள் "பாரெங்கும் பாரதி" என்ற தலைப்பில் இணைய வழியில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் நடத்துதல் – ரூ.50,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ 2.2) துறை

அரசாணை (நிலை) எண். 148

நாள் 17.11.2021
பிலவ, கார்த்திகை – 1
திருவள்ளுவராண்டு 2052

படிக்க:-

1. செய்திக் குறிப்பு எண் 57, நாள் 10.09.2021.
2. மதுரை, உலகத் தமிழ்ச் சங்க இயக்குநரின் கடித எண்.472/2021, நாள் 8.10.2021.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரது கடித ந.க.எண். 8346/வ.செ.2/2021, நாள் 12.10.2021.

******

**ஆணை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆகஸ்ட் 15–ஆம் நாள் மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டதைக் குறிப்பிட்டு பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து பாரதி குறித்த நிகழ்வுகள் **'பாரெங்கும் பாரதி'** என்ற தலைப்பில் நடத்தப்படும்"

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரது கடிதத்தில், தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதை எனும் இலக்கிய வகையை அறிமுகப்படுத்தி, புதுநெறி காட்டிய புலவனின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்துள்ள 251 தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை இணையவழி நவம்பர் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் 11ஆம் நாளில் (பாரதியார் பிறந்த நாள்) நிறைவு செய்யும் வகையில் நடத்தலாம் என்றும், அயலகத் தமிழ் அமைப்பினரும் பங்கேற்பதற்கு எளிமையாக பிற்பகல் 4.00 மணி முதல் 6.00 மணி முடிய நிகழ்வினை இயங்கலை விரிவரங்கம் (சூம்) செயலி மூலம் ஒழுங்கு செய்யலாம் என்றும், அந்நிகழ்வில் அயலகத் தமிழ் அமைப்பினர், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்டவர்களுடன் தமிழகத்திலுள்ள தமிழ் அமைப்பினர், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரையும் பங்கேற்கச் செய்யலாம் என்றும், இந்நிகழ்வின் நிறைவுப் பகுதியாக இரண்டு நாள்கள் பாரதியாரின் நினைவு

நூற்றாண்டை நினைவுகூரும் விதமாக 'பாரதி 100' என்ற தலைப்பில் நூறு கவிஞர்கள் பங்கேற்கும் கவிதைச் சங்கமம் என்ற நிகழ்வினையும் சிறப்புக் கவியரங்கம், பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளையும் நடத்தலாம் என்றும், 'பாரெங்கும் பாரதி' என்ற இணையவழி நிகழ்வினை நடத்துவதற்காக இயங்கலை விரிவரங்கம் (சூம்) செயலிக்கான சேவைக் கட்டணத்தின் விவரம் பின்வருமாறு அளித்துள்ளார்:-

| வ. எண். | செலவினம் | தொகை (தோராயமாக) |
|---|---|---|
| 1. | இயங்கலை விரிவரங்கச் (சூம்) செயலிக்கான (800 பங்கேற்பாளர்கள் பங்கேற்றல், வலையொளி நேரலை) சேவைக் கட்டணம் | ரூ.50,000/- |
| மொத்தம் | | ரூ.50,000/- |

(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை விரைந்து நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் பாரதியாரின் நினைவுகளைப் போற்றும் நிகழ்வினை மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இணையவழியில் நடத்துவதற்கு அனுமதியும் அதற்கான செலவினத் தொகை ரூ.50,000/-ஐ ஒதுக்கீடு செய்திடுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்து மேற்கண்ட அறிவிப்பினை செயற்படுத்தும் வகையில் உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் பாரதியாரின் நினைவுகளைப் போற்றும் நிகழ்வினை மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இணையவழியில் நடத்துவதற்கு தொகை ரூ.50,000/- ஐ அரசு நிலையில் கருதிப்பார்த்து ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பினை செயற்படுத்தும்பொருட்டு, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் பாரதியாரின் நினைவுகளைப் போற்றும் நிகழ்வினை மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இணைய வழியில் (சூம் செயலி) நடத்த அனுமதியும், இதற்கான செலவினத்திற்கு ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202 பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி - 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் - மாநிலச் செலவினங்கள் - AG மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்திற்கான மானியங்கள் - 309 உதவித் தொகை - 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை. "
IFHRMS (த.தொ.கு. 2202 05 102 AG 30903)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.50,000/- 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம)செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை மதுரை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அவர்கள் பட்டியிட்டுப் பெற்று உலகத் தமிழ்ச் சங்க இயக்குநருக்கு வழங்கவும், மதுரை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரால் அளிக்கப்படும் பட்டியை சரியாக இருக்கும் நேர்வில் அனுமதிக்குமாறும் மதுரை சம்பளக் கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இத்தொகைக்கான பயனீட்டுச் சான்றிதழை அரசிற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அனுப்புமாறு உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 49263/நிதி(தவ(ம)செ)/2021, நாள் 15.11.2021–ன் வாயிலாக பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 820 (எண்ணூற்று இருபது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இயக்குநர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை.
உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, மதுரை.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
நிதி (தவ(ம)செ/வ.செ.பொ.II/வ.வ.I)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.